மாண்புமிகு திரு. செ. மாதவன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தம்முடைய சொந்தக் கருத்தாகச் சொல்லுகிறார்கள் என்று நினைக்கிறேன். தம்முடைய சொந்தக் கருத்தாகச் சொன்னால் தமக்கு ஆபத்து வந்து விடும் என்று கருதித்தான் அவர்கள் மாற்றிச் சொல்லுகிறார்கள் என்று நினைக்கிறேன். அவர்களுடைய கட்சி இதைப்பற்றி என்ன சொல்லப் போகிறது என்று தெரியவில்லை. அவர்கள் தம்முடைய கட்சியின் சார்பில், " இலவசக் கல்வி வேண்டாம் " என்று தீர்மானம் கொண்டு வந்தால் அரசாங்கம் அதைப் பரிசீலிக்கலாம். எங்களைப் பொறுத்த வரையில், நாங்கள் " இலவசக் கல்வி தேவை " என்று கருதுகிறோம்.

திரு. சு. துரைசாமி : அமைச்சர் அவர்கள் பதிலளிக்கும்போது, அதிக மான தொகை கொடுக்க இயலாது, வேண்டுமானால் அரசாங்கமே உயர்நிலைப்பள்ளிகளை எடுத்துக்கொள்ளும் என்ற முடிவைத் தெரிவித் தார்கள். திருப்பூர் நகரத்தில் எல்லா உயர்நிலைப்பள்ளிகளுமே நகராட்சி மன்ற நிர்வாகத்தில் இருக்கின்ற காரணத்தால், அவற்றுக்கு முதல் சலுகையாக, வருகிற ஆண்டில் ஓரிரு பள்ளிகளை எடுக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கனம் அங்கத்தினர் அவர்கள் எப்படியாவது ஒரு உறுதியை வாங்கி விடலாம் என்று கருதுகிறார்கள். அதை இப்பொழுது கொடுப்பதாக இல்லை.

பள்ளி மாணவர்களுக்கு சீருடை

* 277 வினா.—**திரு. வி. கே. கோதண்டராமன் :** மாண்புமிகு கல்வி தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப் பாரா—

தொடக்கப்பள்ளிகளிலும், உயர்நிலைப் பள்ளிகளிலும் மாணவிகளுக்கு சீர் உடை வழங்குவதுபோல், மாணவர்களுக்கு உடை வழங்கும் உத்தேச முண்டா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : பள்ளி சிறுவர்களுக்கு தாமே முன்வந்து நிகராடை (uniform) வழங்கும் தற்போதைய திட்டத்தின் கீழ் மாணவர்களுக்கும் மாணவிகளுக்குமிடையே வேறுபாடு எதுவும் செய்யப்படவில்லையாதலால், இவ்வினா எழவில்லை.

திரு. எஸ். ஆறுமுகம் : இந்த மாணவர்களுக்குச் சீருடை வழங்குவதைப் போல் ஆசிரியர்களுக்கும் சீருடை வழங்கவேண்டும் என்று முன்னாள் கல்வியமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதைக் கல்வி அமைச் சர் அவர்கள் ஏற்றுக்கொண்டு, உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கு மட்டுமல்லாமல், கல்லூரி ஆசிரியர்களுக்கும் சீருடை வழங்கக்கூடிய முறையை மேற்கொள்ள அரசுக்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்பொழுது கூட அரசு சீருடைகள் வழங்குவதில்லை. ஆங்காங்கே உள்ளவர்கள் முன்வந்து இப்படிப்பட்ட ஏற்பாடுகளைச் செய்கிறார்கள். எல்லா ஆசிரியர்களைப் பொறுத்தும், அவர்களாகவே முன்வந்து அப்படிச் செய்து கொண்டால் அரசாங்கத்திற்கு ஆட்சேபணை இல்லை.

திரு. பி. எஸ். மணியன் : தனியார் நடத்துகிற சில பள்ளிகளில் ஆசிரியைகள் கட்டாயமாகச் சீருடை அணிந்திருக்கவேண்டும் என்ற முறை அமல் நடத்தப்படுகிறது. இதை விரிவுபடுத்தி எல்லா ஆசிரியைகளும் சீருடை அணியவேண்டும் என்ற உத்தரவை அரசு பிறப்பிக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கட்டாயப்படுத்தினால் ஆபத்து.

திரு. ஜெ. பெள்ளி கௌடர் : நீலகிரியில் குளிர்காலத்தில் அணிந்து கொள்ளுவதற்கென என்.ஜி.ஓ.வினருக்குக் கம்பள உடைகள் வழங்கு வதைப்போல், அங்குள்ள ஆசிரியர்களுக்கும் வழங்க அரசுக்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அதுபற்றிய தகவல் இப்பொழுது என்னிடம் இல்லே.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக் கேள்வி, மாணவர்களுக்குச் சீருடை வழங்குவது பற்றியது. அதை விட்டு, ஆசிரியர்களுக்குச் சீருடை வழங்குவது பற்றி எல்லோருமே கேட்க ஆரம்பிக்கிருர்கள்.

THIRU K. S. KOTHANDARAMIAH : With regard to uniform for students, many poor parents are not able to supply uniform to their children. On this score will the Hon. Minister be pleased to state whether the Government will come to their aid ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : எந்தப் பெற்ருேரும் ஆட்சேபிக்காத அளவுக்குக் குறைந்த விலையில் உள்ள துணிகளைக் கொண்டே சீருடை திட்டம் இருந்து வருகிறது. இப்படிப்பட்ட ஒரு முறை இருந்தால், கல்விக் கூடங்களில் ஒரு நல்ல ஒழுங்கான முறை வளரும் என்ற நம்பிக்கையில் அந்தத் திட்டம் ஆதரிக்கப்படுகிறது.

திரு. பி. மார்டின் : ஸ்பீக்கர் சார், அறிவாலயங்களில் கல்வி பெறுகின்ற மாணவ-மாணவிகளுக்கிடையே பணக்காரர்-ஏழை என்ற வித்தியாசம் இல்லாமல் இருப்பதற்குச் சீருடை முறையை மேல் நாடுகளிலும், இந்த நாட்டில் பல கான்வெண்டுகளிலும், மற்ற இடங்களிலும் நடைமுறையில் வைத்திருக்கிருர்கள். இதை எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் கட்டாயமாக்கி, மாணவ-மாணவிகளுக்கு உடைச் சீர்திருத்தத்தைச் செய்ய அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அப்படிப்பட்ட ஒரு முறை தேவை, அது நல்லது என்பதை அரசு ஒப்புக்கொள்ளுகிறது. ஆனல், கட்டாயப் படுத்திஞல் அதிலே பல சங்கடங்கள் எழலாம். ஏழைக் குடும்பங்களில் உள்ளவர்களுக்கு நாம் கஷ்டம் ஏற்படுத்துகின்ற சூழ்நிலே ஏற்படலாம். இப்பொழுதுகூட, குறிப்பிட்ட நாட்களில் கட்டாயமாகச் சீருடை அணிந்து வரவேண்டும் என்று சொல்லுகிருர்கள். நிரந்தரமாக எல்லா நாட்களிலும் அணிய வேண்டும் என்று இப்போதுகூட வற்புறுத்தப்படுவதில்லே. நாம் திட்டத்தை மக்களுடைய ஒத்துழைப்போடு நிறைவேற்றுவதுதான் நல்லது.

THIRU K. VINAYAKAM : As far as the City of Madras is concerned, is the Government aware of the fact that in almost all the private institutions run by private managements as well as educational trusts this system of uniform dress is being enforced and uniform is being worn voluntarily by the children in these schools and will the Government instruct the Corporation authorities to institute this kind of uniform dress for all school children ? Here and there there are children wearing uniform. But the entire student community should be made to wear uniforms. Will the Government issue instructions to this effect to the Corporation authorities ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மற்ற பள்ளிகளில் பின்பற்றப் படுவதுபோல், மாநகராட்சிப் பள்ளிகளிலும் இத்திட்டம் அமலில் இருக்கிறது. கனம் அங்கத்தினர் விரும்புவது போல், முழுக்க முழுக்க ஏற்படுத்தவேண்டுமென்ருல், கட்டாயமாகத்தான் வந்து முடியும் ; அதற்கு மக்களிடத்திலே ஆட்சேபணை இருக்கும்.

தமிழ்நாட்டில் கனிப்பொருள்கள்

*278 வினு.—**திரு. பெ. மலேச்சாமி :** மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு புவியியல் துறையினர் 1960 முதல் 1968 மார்ச் வரை என்னென்ன கனிவளப் பொருட்கள் கண்டறிந்துள்ளனர் ?